28th March 1963]

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : ஸார், இப்போது அரசாங்கத்திலிருந்து கொடுக்கப்படும்படியான தொகையில் அவர்கள் ஒரு சிறு குடிசையோ, கீத்துக்கொட்டகையோ போட்டுக்கொள்ள முடியாத நிலையில் இருப்பதால் இதைப்பற்றி சிந்தித்து ஆவன செய்ய முன் வருவார்களா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இந்தத் தொகையைக் கொண்டு கீத்துக்கொட்டகையோ அல்லது கட்டிடமோ போட்டுக்கொள்ள முடியாது என்பது அரசாங்கத்துக்குத் தெரியும். பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக உதவி செய்ய வேண்டியிருக்கிறது. அந்த உடனடித் தேவைக்கு இந்தத் தொகை பயன்படும். இப்போது இருக்கக்கூடிய முறைப்படி பாதிக்கப்பட்டவர்களுக்கு கீத்துக்கொட்டகையோ, குடிசையோ போட்டுக்கொள்ளும் பட்சத்தில் அரசாங்கம் ரூபாய் ஆயிரம் வரை கடனுகைக் கொடுக்க முன் வந்திருக்கிறது.

Scavenging Conditions Enquiry Committee

* 412 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the Government are in receipt of the copy of the Report of the Scavenging Conditions Enquiry Committee (1960);

(*b*) whether any communication has been received from the Central Government, regarding the recommendations of the Committee; and

(*c*) if so, the details thereof?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (*a*) & (*b*) Yes.

(*c*) The Government of India have asked this Government to examine the recommendations and take necessary action to implement them.

பள்ளிகள் (உயர்நிலைக்கு மாற்றம்)—கன்னியாகுமரி மாவட்டம்

* *413 கேள்வி.—திரு. எஸ். முருகையன் (திரு. முனு ஆதி சார்பாக) :* கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா— 9-30 a.m.

1962-63-ல் எத்தனை நடுத்தரப் பள்ளிகள் உயர்நிலைக்கு மாற்றப் பட்டுள்ளன—கன்னியாகுமரி மாவட்டத்தில் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Six Government schools and three aided schools.

நெல் சாகுபடி (கீழ் பவானித் திட்டம்)

* *414 கேள்வி.—திரு. க. ர. நல்லசிவம் :* கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கீழ் பவானிப் பாசனத்தில் 1369, 1370, 1371 ஆகிய பசலிகளில் நெல் வைக்காத நிலங்களில் இவ்வருடம் நெல் வைக்கக் கூடாதென உத்தரவிடப்பட்டுள்ளதா ?